Royal College of Anaesthetists

# பொது மயக்க மருந்து வழங்கல்:

## ஆபத்துகள் மற்றும் பக்க விளைவுகள்

ஒவ்வொருவரும் வித்தியாசமாக இருக்கிறார்கள் மற்றும் யார் பக்க விளைவு அல்லது ஆபத்தை அனுபவிப்பார்கள் என்பதை அறிவதற்கு முடியாது. ஏற்கனவே சில உடல் நலக்குறைவு நிலைமைகளைக் கொண்டவர்கள் அல்லது சில குறிப்பிட்ட அறுவைச் சிகிச்சைகள் தேவைப்படுகிற மக்களுக்கு இவை வருகிற வாய்ப்பு கூடுதலாகும்.






கீழுள்ள எண்கள் ஆராய்ச்சி ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட சராசரிகளாகும். பொதுவாக, இந்த ஆராய்ச்சிகளில் பங்கேற்ற மக்கள் வழக்கமான அறுவைச் சிகிச்சைகளைச் செய்துகொண்டவர்கள், நலமான எடையைக் கொண்டவர்கள் மற்றும் அவர்களுக்குக் குறிப்பிட்ட உடல்நலக்குறைவு நிலைமைகள் இருக்கவில்லை.

நாங்கள் பயன்படுத்திய ஆராய்ச்சியைப் பற்றி நீங்கள் இங்கு காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

**உங்களுக்கான ஆபத்துகள் இந்த எண்களைவிடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். உங்களுக்கு ஏற்பட அதிக வாய்ப்புள்ள அல்லது குறிப்பிடத்தக்க அபாயங்களைப் பற்றி உங்கள் மயக்க மருந்து வல்லுனர் உங்களுடன் கலந்தாலோசிப்பார்.**


நீங்கள் வெவ்வேறு வகை மயக்க மருந்துகளைப்பற்றிய தகவல்களை இங்கு எங்கள் இணையத் தளத்தில் வெவ்வேறு மொழிகளில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

**இந்த எண்களை ஒவ்வொரு 100 பேரில் இத்தனைப் பேர் என்று படிக்கவேண்டும்.**

| என்ன நடந்தது? | | எவ்வளவு காலத்துக்கு ? | எத்தனைப் பேருக்கு? ஒவ்வொரு 100 பேரில் (நூறு பேரில்) |
|---|---|---|---|
|  | **நடுக்கம்** | மீட்பு அறையில் 20 முதல் 30 நிமிடங்களுக்கு |  15 பேருக்கு வந்தது · 85 பேருக்கு வரவில்லை |
|  | **குமட்டல் (உடல் நலமின்றி உணர்தல்)** | 1 முதல் 24 மணிநேரத்துக்கு |  சுமார் 15 பேருக்கு வந்தது · சுமார் 85 பேருக்கு வரவில்லை |
|  | **தொண்டைப் புண்** | 24 முதல் 48 மணிநேரத்துக்கு |  20 முதல் 40 பேருக்கு வந்தது · 60 முதல் 80 பேருக்கு வரவில்லை<br>பயன்படுத்தப்பட்ட மூச்சுக் குழாய் வகையைப் பொறுத்தது |
|  | **சிராய்ப்பு அல்லது வலி** உட்செலுத்தல்களால். | சரியாகி விடுகிறது ஒரு சில நாட்களில் |  10 பேருக்கு வந்தது · 90 பேருக்கு வரவில்லை |
|  | **உதடு அல்லது நாக்கில் சிறிய காயம்** | ஆறிவிடுகிறது ஒரு சில நாட்களில் |  1 முதல் 5 பேருக்கு வந்தது · 95 முதல் 99 பேருக்கு வரவில்லை |
|  | **நெஞ்சுத் தொற்று** | சில நாட்கள் அல்லது வாரங்களுக்கு |  20 பேருக்கு வந்தது · 80 பேருக்கு வரவில்லை |
|  | **குழப்பமடைதல் (பிதற்றல் நிலை)** | சில நாட்கள், வாரங்களுக்கு அல்லது மாதங்கள் |  10 முதல் 50 பேருக்கு வந்தது · 50 முதல் 90 பேருக்கு வரவில்லை |

**கீழுள்ள ஆபத்துகள் அரிதாக ஏற்படுபவை.**

இந்த எண்களை 'ஒவ்வொரு 10,000 பேரில் இத்தனைப் பேர்' என்று படிக்கவேண்டும்.

| | என்ன நடந்தது? | எவ்வளவு காலத்துக்கு ? | எத்தனைப் பேருக்கு? ஒவ்வொரு 10,000 பேரில் (பத்தாயிரம் பேரில்) | |
|---|---|---|---|---|
|  | **பற்களுக்கு சேதம்** | ஒரு பல் மருத்துவரால் பார்க்கப்பட வேண்டும் | 5 பேருக்கு வந்தது | 9,995 பேருக்கு வரவில்லை |
|  | **மங்கலான பார்வை, கண் எரிச்சல் அல்லது வலி** ஒரு சிறிய கீறல் அல்லது வறண்ட கண்கள் காரணமாக. | ஒரு சில நாட்கள் | **சுமார்** 5 பேருக்கு வந்தது | **சுமார்** 9,995 பேருக்கு வரவில்லை |
|  | **கூச்ச உணர்வு, உணர்வின்மை, வலி அல்லது பலவீனம்** (நரம்புச் சேதம்). | தற்காலிகமானது (வாரங்கள் முதல் மாதங்கள் வரை) | 1 **முதல்** 5 பேருக்கு வந்தது | 9,995 **முதல்** 9,999 பேருக்கு வரவில்லை |
| | | நிரந்தரமானது | 1 நபருக்கு வந்தது | 9,999 பேருக்கு வரவில்லை |
|  | **கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (அனாபிலாக்ஸிஸ்)** | விரைவாக ஏற்படுகிறது உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது | 1 நபருக்கு வந்தது | 9,999 பேருக்கு வரவில்லை |
|  | **மாரடைப்பு, எடுத்துக்காட்டாக, அறுவைச் சிகிச்சையின் போது இதயம் நின்றுவிடுதல்** | உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது | 3 பேருக்கு வந்தது | 9,997 பேருக்கு வரவில்லை |

இந்த எண்களை 'ஒவ்வொரு 100,000 பேரில் இத்தனைப் பேர்' என்று படிக்கவேண்டும்.

| | என்ன நடந்தது? | எத்தனைப் பேருக்கு?<br>ஒவ்வொரு 100,000 பேரில்<br>(லட்சம் பேரில்) | |
|---|---|---|---|
|  | **சிறிது நேரம் விழித்துக்கொள்ளுதல்**<br>பொது மயக்கமருந்து வழங்கலின்போது (எதிர்பாராத விழிப்புணர்வு) | 5 பேருக்கு நடந்தது | 99,995 பேருக்கு நடக்கவில்லை |
| | | ஒவ்வொரு 100,000 பேரில் 3 முதல் 4 பேர் இது அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக, அல்லது, அது முடிந்தபிறகு, ஐந்து நிமிடங்களைவிடக் குறைவாக நீடித்ததாகச் சொன்னார்கள்.<br>ஒவ்வொரு 100,000 பேரில் சுமார் 1 நபர் தான் ஏதோ வலியை உணர்ந்ததாகச் சொன்னார்கள். | |
|  | **அவர்களின் கண் பார்வையை இழந்தார்கள் (குருடானார்கள்)**<br>அழுத்தம் அல்லது இரத்த உறைவு கண்பார்வை நரம்பைப் பாதித்ததால். | 1 நபருக்கு வந்தது | 99,999 பேருக்கு வரவில்லை |
|  | **அறுவைச் சிகிச்சையின் சிக்கல்களால் இறந்தார்கள்** | 14 பேர் இறந்தார்கள் | 99,986 பேர் இறக்கவில்லை |
| | **அறுவை சிகிச்சையின் போது அல்லது அதற்குப் பிறகு மாரடைப்பு காரணமாக இறந்தார்** | 1 நபருக்கு வந்தது | 99,999 பேருக்கு வரவில்லை |
| | **மயக்க மருந்து காரணமாக இறந்தார்** | 1 நபருக்கு வந்தது | 99,999 பேருக்கு வரவில்லை |
| | இந்த ஆபத்து பெரிதும் மாறுபடும். எடுத்துக்காட்டாக, சில அறுவை சிகிச்சைகளுக்கு இது அதிகம், அல்லது மக்கள் பலவீனமான, வயதானவர்கள் அல்லது சில சுகாதார நிலைமைகளைக் கொண்டிருந்தால். | | |

## பொறுப்பு துறப்பு

இந்தச் சிற்றேட்டில் உள்ள தகவல்கள் துல்லியமாகவும் சமீபத்தியவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால், இதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க இயலாது. இந்தப் பொதுத் தகவலின்மூலம், உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிடும் என்றோ, உங்களுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய அனைத்தையும் இதனால் கையாள இயலும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்களுடைய தெரிவுகளை, உங்களுக்கு இருக்கும் எந்தவொரு கவலைகளையும் உங்கள் மருத்துவக் குழுவுடன் விவாதிக்கவேண்டும், அதற்கு இந்தச் சிற்றேட்டை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இந்தச் சிற்றேட்டைமட்டும் ஓர் அறிவுறுத்தலாகக் கருதக்கூடாது. எந்தவொரு வணிக அல்லது தொழில் நோக்கத்துக்கும் இதைப் பயன்படுத்த இயலாது. முழு உரிமைத் துறப்புக்கு, தயவுசெய்து இதைப் பாருங்கள்: (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் "Translators without Borders" என்ற மொழிபெயர்ப்பாளர் சமூகத்தின் மொழிபெயர்ப்பாளர்களால் வழங்கப்படுகின்றன. மொழிபெயர்ப்பு இயன்றவரை துல்லியமாக இருப்பதற்காக இந்த மொழிபெயர்ப்புகளின் தரம் சரிபார்க்கப்படுகிறது. எனினும், துல்லியமின்மைகள் மற்றும் சில தகவல்கள் தவறாகத் தெரிவிக்கப்படும் ஆபத்து உள்ளது.

# www.rcoa.ac.uk

patientinformation@rcoa.ac.uk

**© 2024 Royal College of Anaesthetists (RCoA)**
நோயாளி தகவல் விடயங்களை உருவாக்கும் நோக்கத்திற்காக இந்த தகவல் நகலெடுக்கப்படலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்த தகவலின் ஒரு பகுதியை நீங்கள் மற்றொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், பொருத்தமான ஒப்புகை வழங்கப்பட வேண்டும் மற்றும் வரைபடங்கள், பிராண்டிங், படங்கள் மற்றும் சின்னங்கள் அகற்றப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.